**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2022**
---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதறக் ான அதன் ஆறற் லினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதுசந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாகஅபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாகஎன்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன்ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டுபயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 104 | 2013 ஆண்டு முதல் 2023 ஜுன் 09 கணக்காய்வு திகதி வரை நூலகத்திலிருந்து வெளியிற்கு விநியோகித்த ரூபா 71,937 பெறுமதியான 97 புத்தங்கள் | இது தொடர்பாக நிறுவன கட்டுப்பாட்டு சபைக்கு 2023 ஜுன் 30 திகதி கட்டுப்பாட்டு சபை பத்திரமொன்றை சமர்பித்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது. மேலும் நிறுவன கணக்காய்வு | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மற்றும் முகாமைத்துவ குழுவிற்கும் இது தொடர்பாக விடங்கள் அறிக்கையிடப்பட்டன. கட்டுப்பாட்டு சபை தீர்மானம் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 21,762,788 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 14,190,332 ஆகும். அதன் பிரகாம் நிதி விளைவுகளில் ரூபா 7,572,456 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயிற்சி பிரிவினால் கட்டணம் அறவிடும் டிப்ளோமா வேலைத் திட்டம் நடாத்துவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2019/2020 கல்வி ஆண்டிற்கு உரியதாக யாழ்பாணம், தளாவ, கண்டி மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் நடாத்தப்பட்ட கவுன்சிலிங்கில் தொடர்பான டிப்ளோமா பாடநெறி 21 மாத கால வீச்சளவில் நிறைவு செய்ய 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியளவில் இப் பாடநெறியை நிறைவு செய்து 16 மாதங்கள் முதல் 22 மாதங்களிற்கிடையிலான காலம் கடந்திருந்த போதும் பாடநெறியை நிறைவு செய்த மாணவர்களிற்காக சான்றிதழ் வழங்கல் 2023 ஆண்டு வரை தாமதமாகி இருந்தது. | 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறியை உரிய காலத்தினுள் வகுப்பறை விரிவுரைகளை நிறைவு செய்த போதும் கள பயிற்சியை உரிய காலத்தினுள் நிறைவு செய்ய முடியவில்லை. எனினும் 2022 ஆண்டின் பாடநெறியை நிறைவு செய்யும் சந்தர்ப்பத்தில் அவ்வாண்டிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தை நடாத்தி முடிவுறுத்தியிருந்தால் 2023 ஆண்டில் நடந்த சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. | சான்றிதழ்களை வழங்குதனை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | 2019/2020 கல்வி ஆண்டிற்கு உரியதாக 5 இடங்களில் 05 கவுன்சிலிங்கில் தொடர்பான டிப்ளோமாக்களை நடாத்தி நிறைவு செய்திருந்ததுடன் (பாடநெறி காலம் 21 மாதங்கள்) இறுதி பெறுபேறுகள் வெளியிடல் | பாடநெறிகளின் கல்வி நேரசூசிகளின் பிரகாரம் விரிவுரை நடாத்துதல் மற்றும் கள பயிற்சியை தாமதமாக்க நேர்ந்தது. எனினும் அவ்வாறு தாமதமான பாடநெறிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் | உரிய காலத்தினுள் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2023 ஆண்டு வரை தமதமாகி இருந்தது. | நிறைவு செய்து சான்றிதழ்களை வழங்குதலையும் நாடத்தி முடிவுறுத்தியுள்ளது. | |
| (iii) | நிறுவகத்தினால் 04 கல்வி ஆண்டுகளினுள் கட்டணம் அறவிட்ட டிப்ளோமா பாடநெறிக்காக பதிவு செய்த மாணவர் எண்ணிக்கையில் 10 சதவீதம் முதல் 21 சதவீதத்திற்கு இடையிலான அளவொன்று பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர். | மாணவர் பதிவில் 02 கல்வி ஆண்டுகள் வரை பாடநெறியை பூர்த்தி செய்து கொள்ள முடியாது போன மாணவர்களுக்காக மீண்டுமொரு முறை பாடநெறியை பூர்த்தி செய்ய இந்த பாடநெறியின் துணை விதி பிரகாரம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | பாடநெறியை விட்டுச் செல்வதற்கான காரணத்தை பரிசோதித்து மாணவர்களை நிறுத்திக் கொள்ள தேவையான நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | ஆண்டு 02 முதல் 05 வரையிலான கால வீச்சளவிற்குரிய கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணமாக ரூபா 5,450,650 ஆன தொகையொன்றை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது பாடநெறியை விட்டுச் சென்ற மாணவர்களின் பணம் கிடைத்திருக்காததால் உள்ளவாறான நிலைமைக்காக செலவுப் பதிவேடு தயாரிக்க நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் நூலகத்திற்காக 2013 ஆண்டின் போது ரூபா 375,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருலொன்று 2019 ஆண்டின் பின்னர் பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது. | எம்மால் அனைத்து தரவுகளையும் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதுடன் புதிய கணனி இயந்திரமொன்று கிடைத்த உடன் அத்தரவுகளை கணனி இயந்திரத்திற்கு உள்ளீடு செய்து முழுமையாக மென்பொருளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | தேவையின் பிரகாரம் கொள்வனவு செய்ய வேண்டியதுடன் சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |